மதுரை சீடு இளைஞர்கள் வழங்கும் தனிச்சுற்று இதழ்

# புதிய வெளிச்சங்கள்

"வெளிச்சத்தின் வேராய் விளங்குவோம்
புது உலகின் மாதிரியாய் திகழ்வோம்"

ஏப்ரல் – ஜுலை 08 | உலகு 1 | வெளிச்சம் 1

## சீடு முழக்கங்கள்

- ★ தாய்மொழி வழிக்கல்வியை ஆதரிப்போம்
- ★ அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் நமக்கானவை
- ★ தரமான ஆரம்பக் கல்வியே
  நம் வாழ்வைத் தீர்மானிக்கும்
- ★ நலிவுற்ற ஓர் குழந்தைக்கு கல்வி உதவிகள்
  வழங்குவது ஒரு தலைமுறைக்கு வாழ்வளிப்பது போன்றது
- ★ தரமான கல்வியே,
  மனித உரிமைகளுக்கான வலிமையான அரண்.
- ★ கல்வியின் மிகத் தெளிவான பலன் என்பது ஒவ்வொரு மாணவனும்
  தானாக சிந்தித்து, தனக்குள்ளிருக்கும் நல்ல,
  தீய நாட்டங்களையும், ஆற்றல்களையும் உணர்ந்து
  தன் வாழ்க்கையை ஆற்றுப்படுத்தக் கற்றுக்கொள்வது தான்.
- ★ பெண்ணின் மகத்துவம் ; மதுரையின் தனித்துவம்
  பெண்மையைப் போற்றுவோம்!
- ★ ஆணும் பெண்ணும் ஒன்னு
  அறியாதவர் தலையில மண்ணு
- ★ குழந்தைகள் வருமானம்
  குடும்பத்திற்கு அவமானம்
- ★ குழந்தைகள் விரும்புவதை நீங்களும்
  விரும்புங்கள் ; அப்போது நீங்கள் விரும்புவதை
  அவர்களும் விரும்புவார்கள்

- ★ அரசு ஆதரவில் படித்து பட்டம் பெறும் இளைஞனே,
அயல் நாட்டிற்கா உன் உழைப்பைத் தருவது?
- ★ வரதட்சணை வாங்காதீர்
பெண்ணை விலை பேசாதீர்
- ★ தண்ணீர், எரிபொருள், மின்சாரம் மூன்றிலும்
எப்போதும் சிக்கனம் காத்திடுக.
- ★ உடல் உழைப்பும் மூளை உழைப்பும் சமம்
உழைத்திடுவோம் ! உயர்ந்திடுவோம் !

---

- ★ **சீடு இளைஞர் பேரவை**

தேடல்கள் அரங்கம், சீடு இளைஞர் வங்கி – இளைஞர் கலைக்குழு

S.முத்துக்குமார் M.A.
A.S.கார்த்திக் பாரதி M.A. M.Phil
M.மன்சூர் B.Sc.,
K.அன்பரசன் M.S.W.
K.சுப்புராஜ்
V.பெத்துராஜ்
O.மணிகண்டன் B.E.
P.முனியசாமி B.A.
S.முருகபாண்டி B.A.
M.பெரியசாமி B.E.

P.சரண்யா B.Sc.
M.அமுதா B.A.
R.கௌசல்யா
D.பழனிச்சாமி
R.ஸ்டாலின்ராஜா
D.பாலமுருகன் B.A.
R.கார்த்திக் B.A.
O.மோகன் B.A.
C.பிரேம்குமார் B.A.
M.தங்கவேலாயுதம்

K.அழகிரி
C.அருண்குமார்
R.பாஸ்கர் ராஜா
M.மாரிமுத்து
M.மருதுபாண்டி
M.சிவகுருநாதன்
S.சுல்தான் அலாவுதீன்
M.சுரேஷ் ராஜன்
N.ராம்குமார்
S.மணிகண்டன்

---

# MADURAI SEED

*Support and Empower the underprivileged*




Regd. No. 61/07
Arjuna Shanmuga Illam
439/1, East Street,
Karumbalai,
Madurai -20.
Ph : 6456503
Cell :9894805446
9244556503

## மதுரை மண்ணின் பண்பாட்டு வளமை அதனால் பெற்றோம் பன்னாட்டு பெருமை

- மதுரம் என்பது மதுரை என்று மருவியுள்ளது என்ற கருத்துள்ளது
- சமய குரவர்கள் நால்வரும் பாடி போற்றிய புண்ணிய நகர் மதுரை
- 64 சக்தி பீடங்களில் முதன்மையானது மதுரை
- இறைவன் தன் பக்தர்களுக்காக 64 திருவிளையாடல்கள் நடத்திய பெருமை மிக்க நகர் மதுரை
- மூன்று சங்க காலங்களுக்கும் மதுரை அரங்கமாக விளங்கியது
- மகாத்மா காந்தியடிகளை பாதி உடை மகனாக்கிய பெருமை மதுரைக்கு உண்டு
- மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் அஞ்சல்வழியில் சட்டம் மற்றும் ஆசிரியப் பயிற்சி அளிப்பதில் பிற பல்கலைக்கழகங்களுக்கு முன்னோடியாக திகழ்கின்றது
- தாமரை மலராக மீனாட்சியம்மன் ஆலயமும், அதன் இதழ்களாக மதுரை வீதிகளும் அமைந்துள்ளன
- மீனாட்சியம்மன் கோயில் சுந்தரேஸ்வர சன்னதி கருவறை விமானத்தை 32 சிங்கங்களும் 64 பூத கணங்களும் தாங்கி நிற்பதாக அமைந்துள்ளது



- மீனாட்சியம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் சங்கீத தூண்கள் உள்ளன. அவற்றை தட்டினால் இன்னிசை பிறப்பது அதிசயம்
- ரோம், ஏதென்ஸ், எகிப்துக்கு நிகரான வரலாற்று பெருமை மதுரைக்குண்டு
- மதுரை திருமலைநாயக்கர் மகாலில் தூண் எதுவும் இல்லாமல் நிற்கும் விதானம் கட்டிட கலையில் பொறியியல் சாதனை.
- திருப்பரங்குன்றம் குடவரை கோயிலில் உள்ள சிற்ப வேலைபாடுகள் நிறைந்த 48 தூண்கள் மற்றும் பிற நாயக்கர் கால சிற்பங்கள் மிகவும் அதிசயமானவை.
- அழகர் மலை நூபுரகங்கை அருகில் அமர்ந்துதான் இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை எழுதியதாக கூறப்படுகிறது.
- சித்திரை மாதத்தில்தான் சங்கர ஜெயந்தி, ராமானுஜர் சாத்துமுறை விழா நடைபெறுகிறது. ஸ்ரீபெரும்புதூர், திருவல்லிக்கேணி, குருவாயூர், திருப்பதி, ஸ்ரீரங்கம், திருப்புகலூர், மதுரை, வேதாரண்யம், திருவையாறு, காஞ்சி முதலிய பல திருத்தலங்களில் சித்திரைத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

கரும்பாலை சிறு செந்தமிழ் நூலகம்



# சித்திரைத் திருவிழா

திருவிழாக் கொண்டாட்டங்கள் ஒட்டுமொத்த மனித சமுதாயத்திற்குள் ஏற்படுத்தும் மாற்றங்கள் அற்புதமானவை. எண்ணிப்பார்க்கையில் பிரமிப்பை ஊட்டுபவை. அவற்றில் ஒன்றுதான் மதுரை நகரில் ஒருபுறம் கொண்டாடப்படும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் திருவிழாக் கொண்டாட்டங்கள் மற்றும் மறுபுறம் அழகர்மலையில் எழுந்தருளியுள்ள கள்ளழகரின் மதுரை நகர் பிரவேசக் கொண்டாட்டங்கள் இவை இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து திருவிழாக்களின் முக்கியத்துவத்தை பாண்டி நாட்டில் அழுத்தமாகப் பதிவு செய்கின்றன. ஊடே வைகை நதி இரு கொண்டாட்டங்களையும் இணைக்கும் விதமாக பெருமிதத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறது. இக்கொண்டாட்டங்களின் தலையாய அம்சம் அன்னை மீனாட்சியின் திருக்கல்யாண வைபவம், தேர்த்திருவிழா, கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குதல்.

தன் அன்பு மக்களை ரட்சிக்க அந்த ஆதிசிவன் ஆடிய திருவிளையாடல்களில் ஐந்தாவதாக அன்னை மீனாட்சியின் திருமணப் படலம் வருகிறது. விண்ணில் இருந்து தேவியை மண்ணுக்கு அனுப்பி உடம்பிலே சமபங்கு கொடுத்ததை உரைக்கும் உணர்த்த ஆட்சிப் பொறுப்பிலும் சம பங்களித்து, அந்த தேவியை உலகெல்லாம் வெற்றி கொள்ளச் செய்து பின்னர் தானே நேரில் வந்து திருமணம் செய்து சக்தியை இணைத்து வெற்றிக் கொண்ட தினம் திருக்கல்யாணமாகும்.

ஊர் கூடினால் மனித சக்தி ஒன்றுபட்டால் ஊரே கோயிலாகும், தெய்வம் தேடி வரும் என்கிற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது தேர்த்திருவிழா வைபவம்.

சித்திரை திருவிழாவின் உட்சபட்ச நிகழ்வுதான் கருணை மிகுந்த கள்ளழகரின் ஆற்றுப் பிரவேசம். தங்கக் குதிரை வாகனத்தில் அவர் அமர்ந்து வரும் அழகே அழகு. மண்டூகமாகிப் போன மகரிஷிக்கு சாபவிமோசனம் அளித்திட ஆற்றில் இறங்கும் கள்ளழகர் தனது பத்து அவதாரங்களையும் ஆற்றோரமுள்ள ராமராயர் மண்டகப்படியில் எடுத்துக்காட்டி அருள்வது திருவிழாவின் சிறப்பம்சம்.

ஒவ்வொரு ஆண்டும் நிகழும் மனச்சலவை நிகழ்வுகள் தான் சித்திரை திருவிழா. இவை எண்ண எண்ண இனிப்பதால் எண்ணியவாறே இருப்போம்.



A.S. வீமன்
கட்டிடக்கலைஞர், பில்டிங் காண்ட்ராக்டர்,
அர்ஜுன் சண்முகா பில்டிங் கன்ஸ்ட்ரக்சன்
செல் : 9788155757



ஸ்ரீ முத்தன் பிரிண்டர்ஸ், மதுரை-2. போன் :2524734, 3256908, 9865935571